**கவனிக்க** .- *2014.08.29 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1879 - 2014 සැප්තැම්බර් මස 05 වැනි සිකුරාදා - 2014.09.05

*1879 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1040 | வரவு செலவுக் கூற்றுகள் | 1050 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1044 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- *நகர சபைகள் (திருத்தச்) சட்டமூலம் 2014, ஓகத்து மாதம் 01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா**,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## களனி பிரதேச சபை

பதவிகள் வெற்றிடம்

2013, திசெம்பர் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (ஆ) உள்ளூராட்சியில் பிரசுரிக்கப்பட்ட பதவிகள் வெற்றிட அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது. களனி பிரதேச சபையில் 01.07.2014 ஆந் திகதியிலிருந்து நிலவும் வெற்றிட பதவிகளுக்காக ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு தகைமைகளுள்ள மேல் மாகாணத்திற்குள் நிரந்தர வசிப்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | ஆகக் குறைந்த கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | சாரதிகள் II ஆ | 01 | ரூபா 12,470-10X130-10X145-10X160-12X170-ரூபா 18,860 (பொ. நி. சு. 06/2006 IV) இல் (பீஎல் 2- 2006ஏ) | **பொதுத் தகைமைகள் :**<br>1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.<br>2. சிறந்த நடத்தையும் தேகாரோக்கியமும் உடையவராகவிருத்தல் வேண்டும்.<br>3. விண்ணப்பங்கள் கோரப்படும் வேளையில் மேல் மாகாணத்தில் ஆகக்குறைந்தது மூன்று வருட நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.<br>4. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதியுட்பட அண்மைய மாதத்தின் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.<br>5. ஏற்கனவே அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஊழியருக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதாகாது.<br><br>**கல்வித் தகைமைகள்:**<br>1. க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் (ஒரு தடவையில் 5 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**ஏனைய தகைமைகள்:**<br>1. பிரத்தியேக வாகனம் மற்றும் நிகர நிறை 24 அந்தரிற்கு குறைந்த பார மோட்டார் வாகங்கள் செலுத்துவதற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட நிபுணத்துவ சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். ஆட்சேர்ப்புத் திகதியிலிருந்து 3 வருடங்களுக்கு முன் அதற்குரிய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். |

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | ஆகக் குறைந்த கல்வி தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | 2. திணைக்களத்தின் பிரதிநிதியொருவர், மோட்டார் போக்குவரத்து திணைக் களத்தின் மோட்டார்வண்டி பரீட்சிப் பவர் பொலிஸ் போக்குவரத்து பிரிவின் அலுவலரொருவர் அடங்கிய சபை யினால் நடாத்தப்படும் சாரதி பயிற்சி நிபுணத்துவத்தை மதிப்பிடும் பரீட்சை யில் சித்தியடைதல் வேண்டும். |
| 02 | வேலை/துறை தொழிலாளி | 02 | ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 (பொ. நி. சு. 06/2006 IV) இல் (பீஎல் 2- 2006ஏ) | **பொதுத் தகைமைகள்:** 1. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும். 2. சிறந்த நடத்தையும் தேகாரோக்கியமும் உடையவராகவிருத்தல் வேண்டும். 3. விண்ணப்பங்கள் கோரப்படும் வேளை யில் மேல் மாகாணத்தில் ஆகக்குறைந் தது மூன்று வருட நிரந்தர வதிவாள ராக இருத்தல் வேண்டும். 4. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதியுட்பட அண்மைய மாதத்தின் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற் படாமலும் இருத்தல் வேண்டும். 5. ஏற்கனவே அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஊழியருக்கு இவ்வயதெல்லை ஏற்புடை யதாகாது. **கல்வித் தகைமைகள்:** தரம் 5/ஆண்டு 6 இல் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். |

**சேவை நிபந்தனைகளும் நியதிகளும் :**

(1) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

(2) விதவைகள்/தபுதாரி, அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு அங்கத்துவப் பணம் செலுத்துதல் வேண்டும் ;

(3) இப்பதவிக்கு நியமனம் பெற்றோர் 3 வருட கால நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டவராவர் ;

(4) இவ்வாட்சேர்ப்பு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கும் தாபனக் கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் அரச அல்லது மேல் மாகாண சபையினால் காலத்திற்குக்காலம் விநியோகிக்கப்படும் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் கட்டளைகளுக்கும் அமைய செயற்படுவதற்கும் நியமனம்பெற்றோர் கட்டுப்பட்டவராவார் ;

(5) இச்சேவைக்கு சேர்ந்து மொழிக்கு மேலதிகமாக இச்சேவையில் சேர்ந்து 5 வருடங்களுக்குள் இன்னுமோர் மொழியில் தேர்ச்சிப்பெற்றிருத்தல் வேண்டும்

**ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம் :**

(1) பொது நிருவாக சுற்றறிக்கை 15/90 இற்கமைய, எழுத்துமூல/தொழில்சார் அல்லது நேர்முகப் பரீட்சைமூலம் தகைமைகள் உள்ளோர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்;

(2) விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் வேண்டுமென்பதுடன் மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) கல்விச் சான்றிதழ் ;

(iii) நிரந்தர வதிவை நிரூபிக்கும் பிரதேச செயலாளரின் சான்றிதழ் ;

(iv) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள் இரண்டு (அதில் ஒன்று பிரதேசத்தின் கிராம அலுவலரிடம் பெற்றதாக இருத்தல் வேண்டும்) ;

(v) தொழில் சார் அனுபவம் மற்றும் அனுபவம் இருப்பின் அதற்கான சான்றிதழ்கள், (ஏலவே அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை நிறுவனத் தலைவரின் சிபாரிசு சான்றிதழுடன் அனுப்புதல் வேண்டும்.)

2. ஆரம்ப தகைமைகளை பூர்த்திசெய்து விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும்.

**விண்ணப்பம் அனுப்புதல்.**- விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தினை தயாரித்து 25.09.2014 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், களனி பிரதேச சபை, புளுகஹ சந்தி, களனி" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுப் பக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவங்களை கோரியதன் பின்னர் அல்லது கோரும் காலப்பகுதிக்கிடையில் இவ்வாட்சேர்ப்புக்களை தாமதித்தல் அல்லது மாற்றஞ்செய்தல் அல்லது ஆட்சேர்த்துக்கொள்வதற்கு நியமித்திருந்த பதவி எண்ணிக்கைகளை திருத்துதல்/தீர்மானித்தல் அல்லது இவ்வறிவித்தலை இரத்துச் செய்தல் ஆகியவற்றிற்கான சகல தத்துவங்களும் களனி பிரதேச சபை செயலாளருக்கே உரித்தானதாகும்.

எச். எம். என். குமாரி,
செயலாளர்,
களனி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
களனி,
2014, ஓகத்து 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**களனி பிரதேச சபை**

மேல் மாகாண அரசாங்க சேவையில் .................................... பதவிக்கு ஆட்சேர்த்தல்

1. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர் :----.
2. முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் :----.
3. நிரந்தர பதிவு மாவட்டம் :----.
4. நிரந்தர விலாசம் :----.
5. பால் (பெண்/ஆண்) :----.
6. விவாகமானவரா? விவாகமாகாதவரா? :----.
7. பிறந்த திகதி :----.
   ஆண்டு :---- மாதம் :---- திகதி :----.
8. 01.01.2014 ஆந் திகதியன்று வயது :
   வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.
9. நீர் இலங்கை பிரசையா? அவ்வாறாயின், பரம்பரை மூலமாகவா? பதிவின் மூலமாகவா? :----.
10. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

11. கல்வித் தகைமைகள் :----.
(i) சித்தியடைந்த ஆண்டு/தரம் :----.
(ii) க. பொ. த. (சா. த) பரீட்சை சுட்டிலக்கம் :---- வருடம் :----, மாதம் :----.
சித்தியடைந்த பாடங்கள் :-

| | பாடம் | தரம் |
|---|---|---|
| (i) | ......................................... | ............. |
| (ii) | ......................................... | ............. |
| (iii) | ......................................... | ............. |
| (iv) | ......................................... | ............. |
| (v) | ......................................... | ............. |
| (vi) | ......................................... | ............. |
| (vii) | ......................................... | ............. |
| (viii) | ......................................... | ............. |
| (ix) | ......................................... | ............. |
| (x) | ......................................... | ............. |

12. தொழில்சார் தகைமைகள் :----.
13. சேவை அனுபவம் :----.
14. தண்டனைச் சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றில் தண்டனை பெற்றுள்ளீரா :----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் பிழையற்றவையும் என உறுதியுரைக்கிறேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைக்களுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவையென நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் எவ்வித நட்டஈடுமின்றி பதவி நீக்கத்திற்கு ஆட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

---------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :----.

**(விண்ணப்பதாரி தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் பதவி வகிப்பவராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்)**

விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ........................................... தற்போது இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் (நிரந்தர/அமய/பதிலீடு/ஒப்பந்த அடிப்படையில் .................. திகதி முதல் ............. திகதி வரை ............... ஆக சேவையாற்றுகின்றார். அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு நியமிக்கப்படுவாராயின், அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்விதத்திலும் சட்டத்திற்குட்பட்ட தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என இத்தால் சான்றுப்படுத்துவதுடன் விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கிறேன்.

------,
திணைக்கள தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திணைக்களம்/நிறுவனம் :----.
(பதவி முத்திரை இடவும்)
திகதி :----.

9-41

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## ராஜாங்கனை பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 127 ஆம் பிரிவுடன் வாசிக்கப்படக்கூடிய சுடுகாடு மற்றும் புதைகுழி சட்டப்பிரகாரம் 3 ஆம் பிரிவின் கீழ் ராஜாங்கனை பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2013.09.26 ஆந் திகதி நடைபெற்ற பிரதேச சபை கூட்டத்தில் முன்மொழியப்பட்ட ஆலோசனைகளின்படி கீழ்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டது என இத்தால் அறியத்தருகின்றேன்.*

ஜி. எச். சரத் காமினி,
தலைவர்,
ராஜாங்கனை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ராஜாங்கனை,
2014, ஓகத்து 04.

### சுடுகாட்டினை மீளப்பெற்றுக்கொள்ளும் ஆலோசனை

ராஜாங்கனை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமையப்பெற்றுள்ள கீழ்வரும் சுடுகாடுகள் ராஜாங்கனை பிரதேச சபைக்கு மீளப்பெறல் தொடர்பாக எதிர்ப்பதற்கான காரணங்களை இவ்வறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதி முதல் 14 நாட்களுக்குள் எனக்கு முன்வைப்பதற்கு அதிகாரம் உள்ளதோடு அக்காலத்திற்குள் எதிர்ப்புகள் ஏதும் இல்லாதிருப்பின் அச்சுடுகாடு பிரதேச சபைக்கான சுடுகாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நிருவகிக்கப்படும் எனவும் பொதுமக்கள் தெரிந்துகொள்வதற்காக இத்தால் அறியத்தருகின்றேன்.

ராஜாங்கனை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் உள்ள சுடுகாடுகள்

01. ராஜாங்கனை 18 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | இல. 318, 317, 316 காணித்துண்டுகள் ; |
| தெற்கு | : | இல. 376 காணி ; |
| கிழக்கு | : | இல. 874 காணி ; |
| மேற்கு | : | இல. 374 பனாங்காணி வாய்க்கால், நிலப் பிரதேசம் 2 ஏக்கர். |

02. ராஜாங்கனை 17 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | ஹேமஸ்ரீ மற்றும் கபில ரத்னாயக்க அவர்களின் காணி; |
| தெற்கு | : | ஆர். எம். உபாலி ரத்னாயக்க அவர்களின் காணி ; |
| கிழக்கு | : | அரச காணி ; |
| மேற்கு | : | தம்மன்னா வாவி, நிலப் பிரதேசம் 2 ஏக்கர். |

03. ராஜாங்கனை 16 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச காணி ; |
| தெற்கு | : | சூலனி அவர்களின் காணி ; |
| கிழக்கு | : | டி. வி. தர்மதாச அவர்களின் காணி ; |
| மேற்கு | : | தர்சன அவர்களின் காணி, நிலப் பிரதேசம் 1/2 ஏக்கர். |

04. ராஜாங்கனை 15 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச காணி ; |
| தெற்கு | : | அரச காணி ; |
| கிழக்கு | : | ஆர். எம். எஸ். உதேசிகா அவர்களின் காணி ; |
| மேற்கு | : | எல். சந்திரபால அவர்களின் காணி, நிலப் பிரதேசம் 5 ஏக்கர். |

05. ராஜாங்கனை 15 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச காணி ; |
| தெற்கு | : | லலித் ஆனந்த அவர்களின் காணி; |
| கிழக்கு | : | குஸலா அவர்களின் காணி ; |
| மேற்கு | : | அரச காணி, நிலப் பிரதேசம் 1 ஏக்கர். |

06. ராஜாங்கனை 7 ஆம் பிரிவு சுடுகாடு
வடக்கு : அரச காணி ;
தெற்கு : அரச வீதி;
கிழக்கு : குப்பை வாய்க்கால் ;
மேற்கு : மரண நலன்புரி சங்கம், நிலப் பிரதேசம் 3 ஏக்கர்.

07. ராஜாங்கனை 6 ஆம் பிரிவு சுடுகாடு
வடக்கு : விஜய அவர்களின் காணி ;
தெற்கு : டி. எம். ஆரியரத்ன பண்டார அவர்களின் காணி;
கிழக்கு : அரச வீதி ;
மேற்கு : படுகுனே அவர்களின் காணி, நிலப் பிரதேசம் 1 ஏக்கர்.

08. ராஜாங்கனை 14 ஆம் பிரிவு சுடுகாடு
வடக்கு : கே. ரணசிங்க மற்றும் பிரேமதாஸ அவர்களின் காணி ;
தெற்கு : எச். கே. மல்லிகா அவர்களின் காணி;
கிழக்கு : எச். கே. மல்லிகா அவர்களின் காணி ;
மேற்கு : பியஸ்ரீ சமன் அவர்களின் காணி, நிலப் பிரதேசம்1 ஏக்கர்.

09. ராஜாங்கனை 13 ஆம் பிரிவு சுடுகாடு
வடக்கு : பல்நோக்கு கட்டடம் மற்றும் இந்திகா அவர்களின் காணி ;
தெற்கு : அரச காணி;
கிழக்கு : அரச காணி;
மேற்கு : ஜி. பி. எஸ். அரச வீதி, நிலப் பிரதேசம் 2 ஏக்கர்.

10. ராஜாங்கனை 10 ஆம் பிரிவு சுடுகாடு
வடக்கு : றுகுனு மரண நலன்புரி சங்கம்;
தெற்கு : எச். பி. மல்லிகா குணசீலி அவர்களின் காணி;
கிழக்கு : கமல் அவர்களின் காணி;
மேற்கு : அரச வீதி, நிலப் பிரதேசம்142 ஏக்கர்.

11. ராஜாங்கனை 09 ஆம் பிரிவு சுடுகாடு
வடக்கு : ஜி. பி. எஸ். பழைய அரச வீதி ;
தெற்கு : சூலே முதலாளி, யு. செனவிரத்ன அவர்களின் காணி;
கிழக்கு : 9 ஆம் பிரிவு விகாரை ;
மேற்கு : எச். எம். மல்லிகா அவர்களின் காணி, நிலப் பிரதேசம் 5 ஏக்கர்.

12. ராஜாங்கனை 11 ஆம் பிரிவு சுடுகாடு
வடக்கு : வயல் வாய்க்கால் அரச காணி ;
தெற்கு : அரச காணி;
கிழக்கு : கூரடியா வாவி கால்வாய் ;
மேற்கு : அரச வீதி, நிலப் பிரதேசம் 7 ஏக்கர்.

13. ராஜாங்கனை 8 ஆம் பிரிவு சுடுகாடு
வடக்கு : குப்பை வாய்க்கால்;
தெற்கு : மைத்ரி ரத்ன மற்றும் டபிள்யூ. ஜி. ஜயசேன அவர்களின் காணி;
கிழக்கு : அரச குப்பை வாய்க்கால் ;
மேற்கு : அரச குப்பை வாய்க்கால், நிலப் பிரதேசம் 6 ஏக்கர்.

14. ராஜாங்கனை 4 ஆம் பிரிவு சுடுகாடு
வடக்கு : அனுலா அவர்களின் வீடு மற்றும் அரச கால்வாய் ;
தெற்கு : அரச வீதி;
கிழக்கு : அரச வீதி;
மேற்கு : தர்மே அவர்களின் காணி, நிலப் பிரதேசம் 1 ஏக்கர்.

15. ராஜாங்கனை 5 ஆம் பிரிவு சுடுகாடு
வடக்கு : எம். எச். சந்திரசேன திஸேரா அவர்களின் காணி ;
தெற்கு : அரச வீதி;
கிழக்கு : டபிள்யூ. எச். சுமித் சுசன்த அவர்களின் காணி ;
மேற்கு : அரச வீதி, நிலப் பிரதேசம் 2 ஏக்கர்.

16. ராஜாங்கனை நவகம்மான சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச வயல் காணி ; |
| தெற்கு | : | அரச வீதி; |
| கிழக்கு | : | அரச வீதி; |
| மேற்கு | : | அரச வாய்க்கால், நிலப் பிரதேசம் 2 ஏக்கர். |

17. ராஜாங்கனை கமுந்தேகம சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச வாய்க்கால்; |
| தெற்கு | : | அரச வீதி; |
| கிழக்கு | : | அரச வீதி; |
| மேற்கு | : | அரச வீதி, நிலப் பிரதேசம் 2 ஏக்கர். |

18. ராஜாங்கனை ஸ்ரீமாபுர சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச வயல் காணி ; |
| தெற்கு | : | அரச வயல் காணி ; |
| கிழக்கு | : | சனீ அவர்களின் காணி; |
| மேற்கு | : | அரச வீதி, நிலப் பிரதேசம் 2 ஏக்கர். |

19. ராஜாங்கனை 2 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச வீதி; |
| தெற்கு | : | கருணா அவர்களின் காணி; |
| கிழக்கு | : | அரச வீதி; |
| மேற்கு | : | 1ஆம் பிரிவு அரச வயல் காணி, நிலப் பிரதேசம் 2 ஏக்கர். |

9-23

---

## ராஜாங்கனை பிரதேச சபை

ராஜாங்கனை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட விளையாட்டு மைதானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 108 ஆம் பிரிவின் பொது உபயோகத்தின் கீழ் விளையாட்டு மைதானம் ராஜாங்கனை பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய 2013.09.26 ஆந் திகதி நடைபெற்ற பிரதேச சபை கூட்டத்தில் முன்மொழியப்பட்ட பிரேரணைகளின்படி கீழ்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன என இத்தால் அறியத்தருகின்றேன்.

ஜி. எச். சரத் காமினி,
தலைவர்,
ராஜாங்கனை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ராஜாங்கனை,
2014, ஒகத்து 04.

### தீர்மானம்

01. ராஜாங்கனை 16 ஆம் பிரிவு விளையாட்டு மைதானம் - ரன்தரு விளையாட்டு மைதானம்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | கே. ஏ. அநுர குமாரியின் காணி; |
| தெற்கு | : | கால்வாயுடன் கூடிய பாதை அரச நிலம் ; |
| கிழக்கு | : | என். ஜி. நிலன்தயின் காணி ; |
| மேற்கு | : | எச். பி. பிரசான்தயின் காணி, நிலப் பிரதேசம் 3 ஏக்கர். |

02. ராஜாங்கனை 16 ஆம் பிரிவு நாமல் செவனகம விளையாட்டு மைதானம்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | சமன் குமார திஸாநாயக்க, விஜேரத்ன ஆகியோர்களின் காணி; |
| தெற்கு | : | பிரஜா மண்டபம்; |
| கிழக்கு | : | அரச விவசாய நிலம்; |
| மேற்கு | : | அரச வீதி, நிலப் பிரதேசம் 1 ஏக்கர். |

03. ராஜாங்கனை 15 ஆம் பிரிவு விமுக்தி விளையாட்டு மைதானம்

வடக்கு : அரச வீதி ;

தெற்கு : அரச வீதி ;

கிழக்கு : அரச வீதி ;

மேற்கு : அரச வீதி, நிலப் பிரதேசம் 1 ஏக்கர்.

04. ராஜாங்கனை 06 ஆம் பிரிவு தியவர கம்மான விளையாட்டு மைதானம்

வடக்கு : அநுர பண்டா அவர்களின் காணி ;

தெற்கு : அரச வீதி ;

கிழக்கு : அரச வீதி ;

மேற்கு : அரச வீதி, நிலப் பிரதேசம் 2 ஏக்கர்.

05. ராஜாங்கனை 14 ஆம் பிரிவு விளையாட்டு மைதானம்

வடக்கு : அரச வீதி ;

தெற்கு : டபிள்யூ. லீலாரத்னாவின் காணி;

கிழக்கு : அரச வீதி ;

மேற்கு : சுனில் ஆனந்த மற்றும் எம். பி. ஸ்டிவனின் காணி, நிலப் பிரதேசம் 1/2 ஏக்கர்.

06. ராஜாங்கனை 13 ஆம் பிரிவு சுசரித மரண நலன்புரி சங்கத்திற்கு அருகிலுள்ள விளையாட்டு மைதானம் சுது பரவி விளையாட்டுக் கழகம்

வடக்கு : அரச வீதி;

தெற்கு : அரச வீதி;

கிழக்கு : அரச வீதி;

மேற்கு : சாதா அவர்களின் காணி நிலப் பிரதேசம் 2 ஏக்கர்.

07. ராஜாங்கனை 13 ஆம் பிரிவு விளையாட்டு மைதானம் ஜயசிகுரு விளையாட்டு கழகம்

வடக்கு : அரச வீதி ;

தெற்கு : ஜஸ்டின் மற்றும் நிகால் அவர்களின் காணி;

கிழக்கு : அரச வீதி ;

மேற்கு : அரச வீதி, நிலப் பிரதேசம் 2 ஏக்கர்.

08. ராஜாங்கனை 11 ஆம் பிரிவு புபுது விளையாட்டு மைதானம்

வடக்கு : லால் அவர்களின் காணி ;

தெற்கு : அரச வீதி ;

கிழக்கு : டி. சி. கே. லியனகேயின் காணி ;

மேற்கு : அரச வீதி, நிலப் பிரதேசம் 1/2 ஏக்கர்.

09. ராஜாங்கனை 04 ஆம் பிரிவு விளையாட்டு மைதானம்

வடக்கு : ராஜு, சான்த, அஜித் அவர்களின் காணி ;

தெற்கு : அரச வீதி;

கிழக்கு : அரச வீதி;

மேற்கு : அரச வீதி, நிலப் பிரதேசம் 7 ஏக்கர்.

10. ராஜாங்கனை நவகம்மான விளையாட்டு மைதானம்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச வீதி; |
| தெற்கு | : | அரச வீதி; |
| கிழக்கு | : | ஞானதாச மற்றும் சந்திரபால ஆகியோர்களின் காணி; |
| மேற்கு | : | அரச வீதி, நிலப் பிரதேசம் 2 ஏக்கர். |

11. ராஜாங்கனை கழுந்தேகம விளையாட்டு மைதானம் எவரஸ்ட் விளையாட்டு கழகம்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | ஆனந்த விஜேசிங்க அவர்களின் காணி ; |
| தெற்கு | : | அரச வீதி; |
| கிழக்கு | : | அரச வீதி; |
| மேற்கு | : | வில்சன் அவர்களின் காணி, நிலப் பிரதேசம் 2 ஏக்கர். |

12. ராஜாங்கனை சிறிமாபுற விளையாட்டு மைதானம்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச வீதி; |
| தெற்கு | : | அரச வீதி; |
| கிழக்கு | : | அரச வீதி; |
| மேற்கு | : | அரச கால்வாய், நிலப் பிரதேசம் 2 ஏக்கர். |

13. ராஜாங்கனை நவசிறிகம விளையாட்டு மைதானம் ரன்தரு விளையாட்டு கழகம்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச வீதி; |
| தெற்கு | : | எச். எம். சோமாவதி அவர்களின் காணி; |
| கிழக்கு | : | ஹியுபட் அவர்களின் காணி; |
| மேற்கு | : | ஞானவதி அவர்களின் காணி, நிலப் பிரதேசம் 2 ஏக்கர். |

14. ராஜாங்கனை 2 ஆம் பிரிவு விளையாட்டு மைதானம் ரதுரோச விளையாட்டு கழகம்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச வீதி; |
| தெற்கு | : | அரச வீதி; |
| கிழக்கு | : | அரச வீதி; |
| மேற்கு | : | லியனகே தேமிஸ் சிஞ்ஞோ அவர்களின் காணி, நிலப் பிரதேசம் 2 ஏக்கர். |

15. ராஜாங்கனை 18 ஆம் பிரிவு ஆராமய அருகில் விளையாட்டு மைதானம்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | ஆராமய அமைந்துள்ள காணி ; |
| தெற்கு | : | அரச வீதி; |
| கிழக்கு | : | அரச வீதி; |
| மேற்கு | : | வெற்று காணி, நிலப் பிரதேசம் 2 ஏக்கர். |

16. சிறிமாபுற கரப்பந்தாட்ட மைதானம்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச வீதி ; |
| தெற்கு | : | மக்கள் மன்றம்; |
| கிழக்கு | : | வெற்று காணி; |
| மேற்கு | : | அரச வீதி, நிலப் பிரதேசம் 1/2 ஏக்கர். |

17. 8 ஆம் பிரிவு ஆராமய அருகில் விளையாட்டு மைதானம்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | வெற்று காணி; |
| தெற்கு | : | பாடசாலை விளையாட்டு மைதானம்; |
| கிழக்கு | : | பாடசாலை விளையாட்டு மைதானம்; |
| மேற்கு | : | அரச வீதி, நிலப் பிரதேசம் 2 ஏக்கர். |

**அரணாயக பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 14 ஆம் மற்றும் 24 (2) ஆம் உறுப்புரைகளுக்குக் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆவது உறுப்புரைக்கு அமைய சப்பிரகமுவ மாகாணத்தில் கேகாலை மாவட்டத்தின் அரணாயக பிரதேச சபையினால் எழுத்து வடிவில் காட்டப்பட்டுள்ள பாதைகள் அரனாயக பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகள் என இத்துடன் பிரகடனப்படுத்தப்பட்டு அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

தற்போது பிரதேச சபையினால் அளக்கப்பட்டு அடையாளமிடப்பட்டுள்ள இப்பாதைகள் தொடர்பாக குறிப்பிட்ட காணி உரிமையாளர்களால் யாதாயினும் எதிர்ப்புக்கள் தெரிவிப்பதாயின் இவ்வறிவித்தல் விடுக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் தமது உரிமையை நிரூபிப்பதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச்சட்டத்தின் 24 (2) ஆம் உறுப்புரைக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

ஆர். தினேஷ் குணரத்ன,
தலைவர்,
அரணாயக பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அரணாயக,
2014.08.13.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | வஹரக்கொட நாகஹமுலதென்ன வீதி |
| வீதியின் ஆரம்பமும் முடிவும் | : | அரனாயக்க வீதியில் வஹரக்கொட உதுவன்கந்த பாதையின் நடுவிலிருந்து திருமதி ஏ. டபிள்யூ. ஜீ. யசோ மெனிகே அவர்களின் வீட்டருகில் கல் அமுன ஓடை வரை |
| கிராம அதிகாரிப் பிரிவு | : | 17 C வஹரக்கொட |
| பாதையின் நீளம் | : | 407 மீற்றர், அகலம் : 12 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | | |
|---|---|---|
| 1. | திரு. ஆர். ஜீ. விஜேரத்ன | முதுனேபிடஹேன காணி |
| 2. | திரு. ஆர். ஜீ. டி. ராஜமந்திரி | முதுனேபிடஹேன காணி |
| 3. | திரு. டி. எச். என். ஆரியரத்ன | முதுனேபிடஹேன காணி |
| 4. | திரு. எச். ஜீ. வீரசேன | முதுனேபிடஹேன காணி |
| 5. | திரு. எம். ஐ. கே. பியரத்ன | உடவத்த காணி |
| 6. | திருமதி என். டபிள்யூ. சுமனாவதி | உடவத்த காணி |
| 7. | திருமதி பி. ஜி. விஜேவர்தன | ஹிடினாவத்த காணி |
| 8. | திருமதி என். டபிள்யூ. எல். பத்ரா அமரகாந்தி | ஹிடினாவத்த காணி |
| 9. | திருமதி ஆர். ஜி. திலகரத்ன | இம்புல்கஹவத்த காணி |
| 10. | திரு. எம். ஐ. கே. பியரத்ன | நாகஹமுலதென்ன காணி |
| 11. | திரு. ஆர். ஜீ. லயனல் | கோப்பிவத்த காணி |
| 12. | திருமதி டபிள்யூ. எம். புஷ்பலதா | கிரிபொலே வயல் காணி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | | |
|---|---|---|
| 1. | திருமதி ஏ. டபிள்யூ. டி. ஜீ. யசோமெனிகே | சித்தரகெவத்த காணி |
| 2. | திரு. யு. ஏ. குமாரசிரி | சித்தரகெவத்த காணி |
| 3. | திரு. கே. ஏ. சுனில் ஷாந்த ஜயசிங்க | தலகஹமுலவத்த காணி |
| 4. | திரு. ஜி. எச். ஜி. சி. பிரேமவங்ஷ | தலகஹமுலவத்த காணி |
| 5. | திருமதி ஜி. எச். லீலாவதி | ஹிடினாவத்த காணி |
| 6. | திரு. பி. ஜி. சோமதிலக | ஹிடினாவத்த காணி |
| 7. | திரு. பி. ஜி. விஜேவர்தன | ஹிடினாவத்த காணி |
| 8. | திரு. ஆர். ஜி. அபேரத்ன | மீகஹவத்த காணி |
| 9. | திரு. டபிள்யூ. எம். ஜி. வீரகோன் | நாகஹமுலதென்ன காணி |
| 10. | திரு. பீ. ஜி. ஆர். கே. எஸ். பண்டார | நாகஹமுலதென்ன காணி |
| 11. | திரு. டபிள்யூ. எம். ஜி. விஜேகோன் | நாகஹமுலதென்ன காணி |
| 12. | திரு. எம். ஐ. கே. பியரத்ன | நாகஹமுலதென்ன காணி |
| 13. | திரு. ஜி. ஜி. செனெவிரத்ன | நாகஹமுலதென்ன காணி |

உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. எச். எம். ஆர். டீ. கே. ஹேரத் அவர்களின் 2014.02.08 ஆந் திகதி கொண்ட 50/2014 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்திற்கு ஏற்ப.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | பெஹெனிபெத்தர முத்தேட்டுவே ஹேன ஊடாக மாஓயாவிற்கு செல்லும் பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | பெஹினிபெத்தர பன்சலை அருகில் பாலத்திற்கு அருகிலிருந்து முத்தேட்டுவ ஹேன வரையான பாதை |
| கிராம அதிகாரிப் பிரிவு | : | 45 சி பெஹெனிபெத்தர |
| பாதையின் நீளம் | : | 238 மீற்றர் அகலம் : 8 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. ஈ. பீ. ஜயதிலக | கொஸ்கஹமுல ஹேன தெனிய காணி |
| 2. திரு. ஈ. பீ. குலரத்ன | அகலகொட்டுவ காணி |
| 3. திரு. எஸ். பீ. பிலிது | அகலகொட்டுவ காணி |
| 4. திரு. டி. பீ. அஜித் குமார | தெஹிகஹமுல ஹேன காணி |
| 5. திரு. டபிள்யூ. பீ. ரணசிங்க | தெஹிகஹமுல ஹேன காணி |
| 6. திரு. டபிள்யூ. பீ. குணதிலக | தெஹிகஹமுல ஹேன காணி |
| 7. திரு. பீ. சீ. க்ரிஸ்டா | தெஹிகஹமுல ஹேன காணி |
| 8. திரு. டபிள்யூ. பீ. ஜயசேன | தெஹிகஹமுல ஹேன காணி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. வண. டி. மஹிந்த பாரதி தேரர் | போமலுவேஹேன காணி |
| 2. திரு. எம். பீ. குணசேன | போமலுவேஹேன காணி |
| 3. திரு. எல். விமலதாஸ | தே வத்த காணி |
| 4. திருமதி ஈ. பீ. சோமலதா | போமலுவேஹேன காணி |
| 5. திரு. டபிள்யூ. பீ. ரணசிங்க | முத்தெட்டுவே ஹேன காணி |
| 6. திரு. டபிள்யூ. பீ. பிரேமதாச | முத்தெட்டுவே ஹேன காணி |

உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. எச். எம். ஆர். டீ. கே. ஹேரத் அவர்களின் 2014.02.08 ஆந் திகதி கொண்ட 43/2014 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்திற்கு ஏற்ப.

9-26

---

# வரவு செலவுக் கூற்றுக்கள்

## கண்டி மாநகர சபை

### இடைக்கால வரவு செலவுத் திட்டம் இலக்கம் - 1 - 2014

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 214 (2) (ஆ) பிரிவின்படி 2014 ஆம் நிதி ஆண்டிற்கான கண்டி மாநகர சபையின் இடைக்கால வரவுசெலவுத் திட்டம் இலக்கம் 1, 2014, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் (07) ஏழு நாட்களுக்கு பொது மக்களின் பார்வைக்காக கீழ்க்காணும் அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

1. மாநகர சபை கௌரவ உறுப்பினர்களின் அலுவலகம் மாநகர சபை கண்டி.
2. கண்டி மாநகர சபை ஆணையாளர் அலுவலகம்.
3. பிரதான கணக்காளர் அலுவலகம், மாநகர சபை, கண்டி.
4. டி. எஸ். சேனாநாயக்க ஞாபகார்த்த பொது நூலகம், கண்டி.

டி. மஹிந்திர ரத்வத்தே,
மாநகர பிதா,
கண்டி மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கண்டி,
2014, ஓகத்து 20.

09-505

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**

**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**

**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**

**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***- *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை - 2014**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 05.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.08.2014 |
| | | வெள்ளி | 12.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.08.2014 |
| | | வெள்ளி | 19.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.09.2014 |
| | | வெள்ளி | 26.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.09.2014 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 03.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.09.2014 |
| | | வெள்ளி | 10.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.09.2014 |
| | | வெள்ளி | 17.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.10.2014 |
| | | வெள்ளி | 24.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.10.2014 |
| | | வெள்ளி | 31.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.10.2014 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 07.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.10.2014 |
| | | வெள்ளி | 14.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.10.2014 |
| | | வெள்ளி | 21.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.11.2014 |
| | | வெள்ளி | 28.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.11.2014 |

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.